வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்

நாள் 30.06.2024 ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 111ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி இன்று காலை 11.00 மணிக்கு, அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், மக்கள் மரக்கன்றுகளை வளர்த்து சுற்றுச்சூழல் மேம்பாட்டை உறுதி செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பாரதீய நியாய சம்ஹிதா, பாரதீய நாகரிக் Suraksha சம்ஹிதா, பாரதீய Sakshya சம்ஹிதா ஆகிய 3 புதிய குற்றவியல் சட்டங்களும் நாளை ஜூலை 1ஆம் தேதி முதல் அமலுக்கு வரவுள்ளன.

தேர்வுகளின் வெளிப்படைத் தன்மை குறித்து புதுச்சேரி அகில இந்திய வானொலி நிலையத்தின் மண்டல செய்திப்பிரிவு பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

மனதின் குரல் -1 (18)

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுடன் தனது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் 111ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி இன்று காலை 11.00 மணிக்கு, அகில இந்திய வானொலி, தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பப்பட்டது. அதில் உரையாற்றிய பிரதமர், நாட்டின் அரசியலமைப்பு சட்டம் மற்றும் ஜனநாயகத்தின் மீது மக்கள் தங்களுடைய அசைக்க முடியாத நம்பிக்கையை மீண்டும் நிரூபித்துள்ளதற்கு தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

-3ஆவது முறையாக பிரதமராக பதவியேற்ற பின் அகில இந்திய வானொலியில், மனதின் குரல் நிகழ்ச்சியின் மூலம் முதல்முறையாக உரையாற்றி அவர், 65 கோடி மக்கள் வாக்களித்த இந்த நடந்து முடிந்த மக்களவை தேர்தல், உலகின் மிகப்பெரிய தேர்தலாக கருதப்படுவதாக கூறினார். வெளிப்படையான தேர்தல் நடவடிக்கைகளை உறுதி செய்த தேர்தல் ஆணையம் உட்பட அனைவருக்கும் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

-மனதின் குரல் நிகழ்ச்சியின் மூலம் மக்களுடன் மீண்டும் தொடர்பு கொண்டதற்கு மகிழ்ச்சி தெரிவித்த பிரதமர், இந்தியாவின் வளமான கலாச்சாரத்துடன் கூடிய வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதற்கான முயற்சிகள் இந்நிகழ்ச்சியின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றார்.

மனதின் குரல் -2 (19)

சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மரம் வளர்க்கும் இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர், நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் தங்கள் அன்னையின் பெயரில் மரம் நட வேண்டும் என்றும், அது தொடர்பான புகைப்படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

-அமிர்த மகோத்சவ் இயக்கத்தின் மூலம் நாட்டின் வனப்பரப்பு கடந்த 10 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

துர்க்மெனிஸ்தானில் குருதேவ் ரவீந்திரநாத் தாகூர் சிலை திறக்கப்பட்டது குறித்து பேசிய அவர், உலக அளவில் இந்திய கலாச்சாரம் மற்றும் கலைஞர்களின் புகழ் பரவி வருவதாக மகிழ்ச்சி தெரிவித்தார். நாட்டின் பல்வேறு மாநிலங்களில் பழங்குடியின மக்களின் உற்பத்திப் பொருட்களுக்கான முக்கியத்துவம் அதிகரித்து வருவதாக கூறிய அவர், சுற்றுச்சூழல் மற்றும் ஆரோக்கியத்திற்கு உகந்த பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றார்.

-10ஆவது சர்வதேச யோகா தினம் உலகம் முழுவதும், உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டதாக எடுத்துரைத்த பிரதமர் திரு. மோடி, மார்ஷல் தீவுகளின் அதிபர், பூட்டான் பிரதமர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் உள்ளிட்டோர் யோகா பயிற்சியை மேற்கொண்டு

மனதின் குரல் -3 (19)

விழிப்புணர்வை ஏற்படுத்தியதாக கூறினார். நைல் நதிக்கரை, செங்கடல், பிரமீடுகள் முன்பாகவும் லட்சக்கணக்கான மக்கள் யோகா பயிற்சி மேற்கொண்டதாகவும், எகிப்து நாட்டில் யோகா தினத்தை முன்னிட்டு புகைப்பட போட்டிகள் நடத்தப் பட்டதாகவும் கூறினார்.

-பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் டேபிள் டென்னிஸ், மல்யுத்தம், குதிரை சவாரி, உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் பங்கேற்க, இந்திய வீரர்கள் தகுதி பெற்றுள்ளதை எடுத்துக்கூறிய பிரதமர், அவர்கள் வெற்றி பெறுவதற்கு வாழ்த்து தெரிவித்தார். குவைத் வானொலி, வாரந்தோறும் அரைமணி நேரத்திற்கு இந்தி நிகழ்ச்சியை ஒலிபரப்பி வருவதை சுட்டிக்காட்டிய பிரதமர், அந்நாட்டு அரசுக்கு இதற்காக நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், இன்றைய மனதின் குரல் நிகழ்ச்சியில் மரம் நடுவதன் அவசியம் குறித்த பிரதமரின் வேண்டுகோளை ஏற்று அனைவரும் தங்கள் அன்னையின் பெயரில் மரக்கன்றுகளை நட்டு, வளர்த்து சுற்றுச்சூழல் மேம்பாட்டை உறுதி செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார். பிரதமர் ஆற்றிய உரையின் தமிழாக்கம் இன்றிரவு 8.00 மணிக்கு தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அகில இந்திய வானொலியில் மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

**ஜெய்சங்கர் (10)**

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் இன்று கத்தாருக்கு அரசுமுறை பயணம் மேற்கொள்கிறார். அந்நாட்டுப் பிரதமர் திரு. ஷேக் முகமது பின் அப்துல் ரஹ்மானுடன் இருதரப்பு உறவுகள், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, பாதுகாப்பு, கலாச்சாரம், மக்கள் தொடர்பு, பரஸ்பர நலன் மற்றும் சர்வதேச பிராந்திய விவகாரங்களில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை மேற்கொள்கிறார். அடுத்த 20 ஆண்டுகளுக்கான இயற்கை எரிவாயு இறக்குமதிக்கான 78 பில்லியன் டாலர் ஒப்பந்தத்தில் இருநாடுகளும் அண்மையில் கையெழுத்திட்டுள்ள நிலையில், வெளியுறவுத்துறை அமைச்சரின் இந்தப்பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

ராணுவ தளபதி (16)

40 ஆண்டு கால மேம்பட்ட சேவைக்குப் பிறகு, இன்று ராணுவத் தலைமை தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே பணியில் இருந்து ஓய்வு பெற்றார். ராணுவத் தளபதியாக ஜெனரல் மனோஜ் பாண்டே, வடக்கு மற்றும் மேற்கு எல்லைகளில் செயல்பாட்டு தயார்நிலைக்கு அதிக முன்னுரிமை அளித்தார். ஜம்மு மற்றும் காஷ்மீர், கிழக்கு லடாக் மற்றும் வடகிழக்கில் உள்ள பகுதிகளுக்கு அவர் அடிக்கடி பயணம் செய்து செயல்பாட்டு தயார் நிலை மற்றும், அனைத்து படைகளின் மனஉறுதியையும் அவர் நேரடியாக ஆய்வு செய்தார். அவரது சேவையைப் பாராட்டி அவருக்கு பரம் விஷிஸ்ட் சேவா பதக்கம், அதிவிஷிஸ்ட் சேவா பதக்கம் மற்றும் விஷிஸ்ட் சேவா பதக்கம் ஆகிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்திய ராணுவத்தில் தளபதியாக ஜெனரல் உபேந்திர திரிவேதி இன்று பொறுப்பேற்றுக்கொண்டார். சைனிக் பள்ளி, ரேவா, National Defence College மற்றும் அமெரிக்க ராணுவ போர்க் கல்லூரியின் முன்னாள் மாணவரான ஜெனரல் உபேந்திர திரிவேதி, பாதுகாப்பு மற்றும் மேலாண்மை படிப்பு, ராணுவ அறிவியலில் முதுகலைப் பட்டங்களும், முது தத்துவமானி பட்டங்களும் பெற்றுள்ளார்.

குற்றவியல் சட்டம் (18)

பாரதீய நியாய சம்ஹிதா, பாரதீய நாகரிக் Suraksha சம்ஹிதா, பாரதீய Sakshya சம்ஹிதா ஆகிய 3 புதிய குற்றவியல் சட்டங்களும் நாளை ஜூலை 1ஆம் தேதி முதல் அமலுக்கு வரவுள்ளன. கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட இம்மூன்று சட்டங்களும், இந்திய குடிமக்களுக்கு அதிகாரம் அளிப்பதில், முக்கிய நடவடிக்கையாக திகழ்கின்றன. நாட்டின் நீதிக் கட்டமைப்பை திறம்பட்டதாகவும், அனைவரும் எளிதில் அணுகத் தக்கதாகவும் மாற்றும் நோக்கத்திலான இப்புதிய சட்டங்களில், குற்றச்செயல்கள் பற்றிய தகவல்களை ஆன் லைன் மூலம் அளிக்கவும், எந்தவொரு காவல் நிலையத்திலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவும் வகை செய்யப் பட்டுள்ளது. கைது செய்யப்படும் நபர்கள் தங்களுக்கு விருப்பமான ஒருவருக்கு தகவல் கொடுக்க உரிமை வழங்கப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை முன்னுரிமை அடிப்படையில் விசாரிக்கவும், வகை செய்யப்பட்டுள்ளது. 3 புதிய குற்றவியல் சட்டங்களின் படி, புலனாய்வு, விசாரணை மற்றும் நீதிமன்ற நடைமுறைகளில் தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு உள்ளதாகவும், புதிய குற்றவியல் சட்டங்களை ஜூலை 1 முதல் அமல்படுத்த, அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை

மத்திய அரசு முற்றிலும் ஆயத்தப்படுத்தி இருப்பதாகவும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிய குற்றவியல் சட்டங்கள் குறித்து ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனில் செய்திகள் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப் படுகிறது. விழிப்புணர்வு நோட்டீசுகள் மற்றும் கையேடுகளும் விநியோகிக்கப் படுகின்றன. சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளம் மூலமாகவும், விழிப்புணர்வு தகவல்கள் வழங்கப்படுகின்றன. பள்ளி மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டத்தில் புதிய கிரிமினல் சட்டங்கள் பற்றிய பாடங்களைச் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிய கிரிமினல் சட்டங்கள் குறித்து உயர் கல்வி நிறுவனங்களில் வரும் 1ஆம் தேதி, பயிலரங்குகள் விநாடி வினா போட்டிகள் மற்றும் இதர நிகழ்ச்சிகளை நடத்த பல்கலைக்கழக மானியக் குழு, அகில இந்திய தொழில்நுட்ப கல்வி சபை உள்ளிட்ட அமைப்புகள் ஏற்பாடு செய்துள்ளன. புதிய கிரிமினல் சட்டங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் ஒவ்வொரு காவல் நிலையத்திலும், பொறுப்பு அதிகாரிகள் மூலம், நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

**தேர்வு முகமை (12)**

தேசிய தேர்வு முகமையின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளிலும், தேர்வு நடைமுறைகள் மற்றும் தரவுப் பாதுகாப்பு ஏற்பாடுகளிலும் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து, 7 பேர் கொண்ட நிபுணர் குழு ஆராய்ந்து வருகிறது.

-தேர்வுகளின் வெளிப்படைத் தன்மை குறித்து புதுச்சேரி அகில இந்திய வானொலி நிலையத்தின் மண்டல செய்திப்பிரிவு பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது. அதன் ஒருபகுதியாக புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர், பேராசிரியர் திரு.தரணிக்கரசுவுடன் அகில இந்திய வானொலியின் மண்டல செய்திப்பிரிவு இணை இயக்குநர் டாக்டர் சிவக்குமார் அவர்களின் நேர்முகம் நாளை காலை 11.02 மணிக்கு, ரெயின்போ பண்பலை 102.8 மற்றும் மத்திய அலைவரிசை 1215 khz-ல் ஒலிபரப்பாகும்.

உலகக் கோப்பை (15)

இந்தியா-தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான, 9ஆவது டி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி பார்படாசின், பிரிட்ஜ் டவுனில் உள்ள கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. டாஸ் வென்ற இந்திய அணி, பேட்டிங்கை தேர்வு செய்து 7 ரன் வித்தியாசத்தில் ஆப்பிரிக்க அணியை வென்றது. இந்த வெற்றி இந்தியாவிற்கு பெருமை சேர்த்து இருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக புதுச்சேரி முதலமைச்சர் திரு. என். ரங்கசாமி செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். இந்த தொடரில் இந்தியா ஒரு தோல்வியைக் கூட சந்திக்காமல் தொடர்ந்து, தொடரைக் கைப்பற்றி வென்று இருப்பது குறிப்பிடத்தக்க சாதனை என்று அவர் மேலும் கூறியுள்ளார். இந்த தொடருடன் டி-20 தொடரில் இருந்து, இந்திய கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் திரு. ரோஹித் ஷர்மா மற்றும் திரு. விராட் கோலி ஆகியோர் ஓய்வு பெறுகிறார்கள். இந்திய கிரிக்கெட்டின் வெற்றிப்பயணத்தில் அவர்களின் பங்கு அளப்பரியது என்றும், அவர்களின் பங்களிப்பு கிரிக்கெட் விளையாட்டின் வளர்ச்சிக்கு மேலும் தொடரவும், தாம் வாழ்த்துவதாக தெரிவித்துள்ளார்.

ஜிதேந்திர சிங் (16)

குடும்ப ஓய்வூதியதார்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான சிறப்பு இயக்கத்தை மத்திய பணியாளர் நலன், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் நாளை புதுடெல்லியில் தொடக்கி வைக்க உள்ளார். ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலத்துறை, அதன் 100 நாள் செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக ஜூலை 1ஆம் தேதி முதல் 31ஆம் தேதி வரை குடும்ப ஓய்வூதியதாரர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான ஒருமாத கால சிறப்பு இயக்கத்தை தொடக்க உள்ளது. இதில் மத்திய அரசின் 46 அமைச்சகங்கள் மற்றும் துறைகள் பங்கேற்கின்றன. நிலுவையில் உள்ள குடும்ப ஓய்வூதிய குறைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும். இந்நிகழ்ச்சியில், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நலன், முன்னாள் படை வீரர் நலத்துறை செயலாளர்கள், எல்லைப் பாதுகாப்பு படை தலைமை இயக்குநர், பாரத ஸ்டேட் வங்கியின் துணை நிர்வாக இயக்குநர், அனைத்து ஓய்வூதியம் வழங்கும் வங்கிகளின் பிரதிநிதிகள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நல சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 111ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி இன்று காலை 11.00 மணிக்கு, அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், மக்கள் மரக்கன்றுகளை வளர்த்து சுற்றுச்சூழல் மேம்பாட்டை உறுதி செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பாரதீய நியாய சம்ஹிதா, பாரதீய நாகரிக் Suraksha  சம்ஹிதா, பாரதீய Sakshya சம்ஹிதா ஆகிய 3 புதிய குற்றவியல் சட்டங்களும் நாளை ஜூலை 1ஆம் தேதி முதல் அமலுக்கு வரவுள்ளன.

தேர்வுகளின் வெளிப்படைத் தன்மை குறித்து புதுச்சேரி அகில இந்திய வானொலி நிலையத்தின் மண்டல செய்திப்பிரிவு பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. NV/RK/VM**